DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 52 / 2024
Deposition of PW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மலைச்சாமி |
| Father's / Husband Name | : | பால்பாண்டி |
| Village | : | சிறப்பாறை |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.05.2026.

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் புகார்தாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| 1 | Ex.P1. | 15.08.2023 ம் தேதி கம்பம் சின்டிகேட்(கனரா வங்கி) வங்கி கிளையில் மாற்றக்கூடிய 517241 என்ற எண்கொண்ட காசோலை அசல் |
| 2 | Ex.P2 | 27.09.2023 ம் தேதி மேற்படி எதிரியின் வங்கி கணக்கில் Funds insufficient என்று திருப்பப்பட்டதற்கான மெமோரண்டம் அசல் |
| 3 | Ex.P3 | 29.09.2023 ம் தேதி மனுதாரர் எதிர் மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| 4 | Ex.P4 | 29.09.2023 ம் தேதி மேற்படி நோட்டீஸ் அனுப்பியதற்கான தபால் ரசீது அசல் |
| 5 | Ex.P5 | 03.10.2023 ம் தேதி மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை இணையதள நகல் |

| | | |
|---|---|---|
| 6 | Ex.P6 | 17.10.2023 ம் தேதி அறிவிப்பிற்கு எதிரி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு சார்பு நகல் |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>**எதிரி தரப்பில் கு.வி.**</u>

1. நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என் பெயரில் விவசாய நிலம் உள்ளது. என் தந்தை பெயர் பால்பாண்டி அவர் 17.01.2023 ம் தேதி இயற்கை எய்தினார். எதிரி என்னிடம் பெற்ற கடனுக்கு ஆதரவாக காசோலையை கொடுத்தார் மேற்படி காசோலையில் மலைச்சாமி, சிறைப்பாறை என்று யார் எழுதினார் என்றால் எதிரி தான் எழுதினார். எதிரி என் தந்தையிடம் 2015 ம் வருடம் ரூ.3 லட்சம் பணம் பெற்றார் என்றும், அந்த பணத்தினை ரூ.100 க்கு ரூ.2 வட்டி வீதம் மாதம் ரூ.6 ஆயிரம் வட்டி செலுத்திவந்தார் என்றும் மேற்படி கடன் தொகையை 2019 ம் வருடம் வட்டியும் முதலுமாக செலுத்திவிட்டார் அந்த மேற்படி கடனுக்கு எதிரி என் தந்தைக்கு கொடுத்த காசோலையை எதிரி கேட்ட போது திரும்ப கொடுத்துவிடுவதாக கூறினார் எதிரி என் தந்தைக்கு உறவினர் என்பதால் நல்ல எண்ணத்தில் இருந்துவிட்டார் என்றும் , அவர் இருந்த பின்பு நான் எடுத்து வைத்துக் கொண்டு இந்த பொய்யான வழக்கினை நான் எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. நான் ரூ.3 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் அற்றவர் என்றால் என் தந்தை இறந்ததற்கு வந்த 5 பவுன் நகைகளை அடகு வைத்து எதிரிக்கு ரூ.3 லட்சம் கடன் கொடுத்தேன் நான் வேறு எந்த பணத்தினை வைத்தும் கொடுக்கவில்லை. 2023 ம் வருடம் 5 பவுன் நகை மொத்தம் ரூ.2 லட்சம் தான் நான் அதை ரூ.3 லட்சத்திற்கு அடகு வைத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு நகையை அடகு வைத்து தான் கடன் கொடுத்தேன் என்ற விபரத்தினை என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலோ புகாரிலோ, அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்த போது என் வீட்டில் என் அம்மா இருந்தார். என் அம்மாவை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க நான் தயாராக உள்ளேன்.

3. நான் சொல்வது போல் எதிரி 2023 ம் வருடம் கம்பத்தில் சந்தையை ஏலம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல எதிரி அவரின் தந்தை பெயரில் , மற்றும் அவரின் தம்பி பெயரில் எடுத்து வேலை செய்து வருவதாக சொன்னார். நான் சொல்வது போல் எதிரி என்னிடம் எந்த கடனையும் வாங்கவில்லை என்றும், என் தந்தையிடம் பெற்ற கடனை எதிரி வட்டியும், முதலுமாக செலுத்திவிட்டார் எதிரி வட்டி செலுத்தியதற்கான

ஆவணங்களை வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யானது என்றும், நான் கேட்ட பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் வருமான வரி எதுவும் தாக்கல் செய்வது கிடையாது. எதிரி என்னிடம் 02.06.2023 ம் தேதி கடன் கேட்டார் நான் இப்போதைக்கு பணம் இல்லை நகையை அடகு வைத்து தருவதாக கூறினேன். 18.06.2023 ம் தேதி எதிரி என்னிடம் பணம் பெற்றுச் சென்றார். நான் 2.6.2023 –18.6.2023 க்குள் தான் நகையை அடகு வைத்திருக்க முடியும் என்று சொன்னால் சரிதான். நான் நகையை அடகு வைத்ததை நிரூபணம் செய்யும் வகையில் வங்கி மேலாளரை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

4. 18.06.2023 ம் தேதி தான் எதிரி எனக்கு சின்டிகேட் வங்கி காசோலையை கொடுத்தார் காசோலை எண். 517241 ஆகும். சின்டிகேட் வங்கி , கனரா வங்கியும் ஒன்றா என்றால் இரு வங்கியையும் மெர்ஜ் செய்ததாக எதிரி என்னிடம் சொன்னார். எதிரி எனக்கு அண்ணன் முறை வேண்டும். நான் சொல்வது போல் இந்த வழக்கு பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து மோசடியாக பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரி எனக்கு சட்டப்படியான கடனை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.05.08 16:27:56 +0530

Judicial Magistrate,
Andipatti.